

அரியலூர் தனியார் திருமண மண்டபத்தில் அமுதழகு மாற்றுத்திறனாளிகள் நலச்சங்கம் சார்பில் மாற்றுத்திறனாளிளுக்கு தனி பிரதிநிதித்துவம் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இப்பாராட்டுவிழா கூட்டத்தில் சா.சி. சிவசங்கர், மாநில மாற்றுத்திறனாளிகள் நலச்சங்க செயலாளர் பேராசிரியர் தீபக்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். உடன் மாற்றுத்திறனாளிகள் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.





கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூரில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் புதிய குடும்ப அட்டைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், பொதுக்குழு உறுப்பினர் பாலன், பேரூர் கழக செயலாளர் வெங்கட்டப்பன், பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர் ,காந்தி கவுன்சிலர்கள் கார்த்திக் ஆகாஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில் திட்டப் பணிகள்

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி துவக்கி வைத்தார்!



திருச்சி, பிப்25-

திருச்சி திருவெறும்பூர் தொகுதியில் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் பெரும் முயற்சியினால் நிறைவேற்றப் பட்ட பல்வேறு திட்ட பணிகளின் தொடக்க விழாவும் மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க புதியதாக அமையவிருக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடை பெற்றது.

மாநகராட்சி மண்டலம் மூன்றிற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற பணிகளின் திட்ட மதிப்பு ரூபாய் 750.05 ஆகும்.

பகுதிகளில் புதிய மின் மாற்றிகளும் மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்து வைக்கப்பட்டது

நவீன கழிப்பிடம் பாப்பாகுறிச்சி, அங்கன்வாடி மையம் (சுற்றுச்சுவர்) பாப்பாகுறிச்சி, நியாய விலைக் கடை கணேஷ் நகர்,

மின்மாற்றி துவக்க விழா கணேஷ் நகர், மஞ்சதிடல் மயான சுற்றுச்சுவர் மஞ்சதிடல், ஸ்ரீ நகர் மின்மாற்றி ஸ்ரீ நகர்,மாநகராட்சி பள்ளியில் கூடுதல் கட்டிடம் - கீழக்கல் கண்டார் கோட்டை.

அங்கன்வாடி மையம் திறப்பு விழா - காவிரி நகர்,

தெற்கு உக்கடை அரசு நடுநிலைப் பள்ளி புதிய கட்டிடம் திட்டம், பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (School Improvement Scheme).

தெற்கு உக்கடை அங்கன்வாடி மையம் மையங்கள், செந்தண்ணீர்புரம் மின்மாற்றி (Transformer)

மின்மாற்றி இடம்: திரு. வி.க. தெரு, செந்தண்ணீர் புரம் மின்மாற்றி (Transformer) ஆஷா தெரு மின் மாற்றி, சங்கிலியாண்டபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அடிக்கல் நாட்டு விழா (பூமி பூஜை) .

இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் மாமன்ற உறுப்பினர்கள் நீலமேகம், சிவக்குமார், செந்தில், தாஜுதீன், ரெக்ஸ், சுரேஷ், திருச்சி

டி ஆர் ஒ பாலாஜி,உதவி செயற்பொறியாளர் , திருவெறும்பூர் தாசில்தார் தனலட்சுமி. மேற்குத் தாசில் தார் விக்னேஷ் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்தகுமார், அண்ணாதுரை,பகுதி கழகச் செயலாளர் விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஈரோடு தெற்கு மாவட்டத்தில்

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாக பரப்புரை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு,பிப்.25-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-

முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் “வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாக பரப்புரை’ வரும் பிப்ரவரி 23ஆம் தேதி முதல் அனைத்து பகுதி, ஒன்றியம், பேரூர்களிலும் அனைத்து இடங்களிலும் நடத்திட வேண்டுமென அறிவித்திருந்தார்.

அதன் பொருட்டு பிப்ரவரி 23ம் தேதி தொடங்கி மார்ச் 8ம் தேதி வரை மாலை 5.00 மணியளவில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாக பரப்புரையை” ஈரோடு தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து பகுதி, ஒன்றியம், பேரூர்களைச் சார்ந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கிளைக் கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BCA, BLC கழகத் தோழர்கள் மற்றும் வெல்லும் தமிழ்ப் பெண் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.





மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்லம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம். ஸ்ரீதர், தலைமைச் செயற்கு குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்து. மகேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி. சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ம.க. அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் மார்ச் 1 தமிழக முதல்வர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது பற்றியும், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்துவது பற்றியும் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநகர மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி, பொருளாளர் சுகுமாரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரா மணி, வீராரெட்டி, கிரீஸ் பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன், சீனிவாசன், முன்ராஜ், தனலட்சுமி மற்றும் ஒன்றிய செயலாளர்கள் , பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகம், பரமத்தி வேலூர் ஒன்றியம் மற்றும் பள்ளிபாளையம் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் மாபெரும் பொதுக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் அணி செயலாளரும் தமிழர்கள் வாரிய தலைவருமான கார்த்திகேய சிவசேனாதிபதி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ் மூர்த்தி, ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் பரமத்தி ஒன்றியக் கழகச் செயலாளர் பி.பி.தனராசு, பள்ளிபாளையம் நகரக் கழகச் செயலாளர் அ.குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மகளிர் பொறுப்பாளர்களுக்கு “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பயிற்சி பாசறைக் கூட்டம் தலைவாசல் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகள் மற்றும் செயல் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்து தேர்தல் பரப்புரை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இதில் மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, ஒன்றிய செயலாளர்கள் சாத்தப்பாடி மணி, அழகுவேல் , பாலமுருகன், சித்தார்த்தன் , சந்திரமோகன், தொகுதி பொறுப்பாளர் பொன்முத்து, பேரூர் செயலாளர்கள் பாலமுருகன், சரவணன், வேலு, முருகேசன் , சண்முகம் மற்றும் மகளிர் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - தென்றல் ஆ. சேகர் 25, சீத்தாதங்கபவன இல்லம், நேரு நகர் - 2, எஸ்.வி. புரம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642223, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஜி.எஸ். மயில்சாமி 131, விநாயகர் கோவில் வீதி, கோமங்கலம் அஞ்சல், பொள்ளாச்சி - 642107, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எஸ். பாலசுரேஷ் 4/158எ, அமராவதி மெயின் ரோடு, பள்ளபாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642112.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. முத்துவேல் 3/92 (3/107), விநாயகர் கோவில் வீதி, சிவசக்தி குடியிருப்பு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) ஜா. ஷாஜாதீ பர்வீன் 5, 4, பண்டிதர் சந்து, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) ம. கலைச்செல்வன் உடையார்பாளையம், காரத்தொழுவு, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642203. 4) வீ. கருணாநிதி 8/68, இந்திரா நகர், ஜல்லிப்பட்டி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642112. 5) ச. பாரதிசெல்வன் 33ஏ, செல்லமுத்து நகர் விரிவு, ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி - 642004. திருப்பூர் மாவட்டம். 6) ப. கருப்புச்சாமி 117, மெயின் ரோடு, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642113. 7) எஸ். ஞானசேகர் 7, காளியம்மன் கோவில் வீதி, கிருஷ்ணாபுரம், மடத்துக்குளம் - 642111, திருப்பூர் மாவட்டம்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

சேலம் கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வரதராஜன் அவர்கள் ஆத்தூர் மேற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **திரு.சு.மனோகரன்** (242/3, கூட்டுறவு வங்கி அருகில், செல்லியம்பாளையம், ஆத்தூர், சேலம்) அவர்கள் **சேலம் கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வ.மணிமாறன் அவர்கள் ஆரணி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **எஸ்.பாபு** (1/83, வ.உ.சி. தெரு, கொருக்காத்தூர் கிராமம், வாழப்பந்தல் அஞ்சல், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 632 318.) அவர்கள் **திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

### இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக **வே. ராஜேந்திரன்** (பள்ளபச்சேரி, திருப்புல்லாணி அஞ்சல், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23-02-2026.

**வாகை சந்திரசேகர்,**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சி.முத்துசாமி

### பிப்ரவரி 25 (2018)



மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.